பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 08 2024 **WEDNESDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் 78-ஆவது சுதந்திர தினம், 2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற மையக்கருத்தோடு கொண்டாடப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

2. புதுதில்லியில் நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவில் விவசாயிகள், இளையோர், அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்ட ஆறாயிரம் பேர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்கின்றனர்.

3. சுதந்திர தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆற்றும் உரை அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷனில் இன்னும் சற்றுநேரத்தில் ஒலிபரப்பாகிறது.

4. பாடநூல்கள் விலை லாப நோக்கத்திற்காக உயர்த்தப்படவில்லை என்று தமிழக அரசு கூறியுள்ளது.

5. இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக தென்னாப்பிரிக்காவின் **Morne Morkel** நியமிக்கப்பட்டுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

நாட்டின் 78-ஆவது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுதில்லியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க செங்கோட்டையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றவுள்ளார்.

2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதம் என்பதை மையக்கருத்தாக கொண்டு இந்த ஆண்டு சுதந்திர தினம் கொண்டாடப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சுதந்திர தின கொண்டாட்டங்களில் மக்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், ஆறாயிரம் சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்க உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர், விவசாயிகள், மகளிர், இளையோர் ஆகியோர் இந்த சிறப்பு அழைப்பாளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அங்கன்வாடி பணியாளர்கள், பஞ்சாயத்து அமைப்புகளின் மகளிர் தலைவர்கள், மகளிர் மற்றும் குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலகங்களில் பணியாற்றுபவர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 23 பேர் சிறப்பு அழைப்பாளர்களாக சுதந்திர தின நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

இதில் பங்கேற்பது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக சென்னையை சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

**mygov** இணையதளம் மற்றும் ஆகாஷவாணியுடன் இணைந்து பாதுகாப்பு அமைச்சகம் நடத்திய இணையதள போட்டிகளில் வெற்றிபெற்ற மூன்றாயிரம் பேரும் இதில் பங்கேற்கின்றனர்.

சுதந்திர தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களிடையே இன்னும் சற்றுநேரத்தில் உரையாற்றவுள்ளார்.

அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷனில் குடியரசுத் தலைவரின் உரை ஒலி-ஒளிபரப்பு செய்யப்படுகிறது. குடியரசுத் தலைவர் உரையின் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி இரவு மணி 9.30-க்கு ஒலிபரப்புகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும். குடியரசுத் தலைவர் உரை காரணமாக ஆகாஷவாணி செய்தியறிக்கை இரவு மணி 7.15-க்கு பதிலாக, எட்டு மணிக்கு ஒலிபரப்பாகும்.

**<<<<<<>>>>>**

அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் வெற்றி நிச்சயம் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சுதந்திர தின கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கவுள்ள நாட்டுநலப்பணித்திட்டம் மற்றும் மை பாரத் இயக்க தன்னார்வலர்கள் இடையே கலந்துரையாடிய அவர், எல்லா துறைகளுக்கும் இது பொருந்தும் என்றார்.

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக அடுத்த 23 ஆண்டுகளுக்குள் உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் அதிகம் பயன்பெறப்போவது இளையோர்தான் என்றும் அவர் கூறினார்.

இதனை கருத்தில்கொண்டு, வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்காக அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி **Raksha Nikhil Khadse,** நாட்டுநலப்பணி தன்னார்வலர்கள் மற்றும் மை பாரத் இயக்கத்தில் இணைந்துள்ளோர் ஆற்றிவரும் சேவை பாராட்டுதலுக்குரியது என்று குறிப்பிட்டார்.

**<<<<<<>>>>>**

பாடநூல்கள் விலை லாப நோக்கத்திற்காக உயர்த்தப்படவில்லை என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாடப்புத்தகம் தயாரிப்பதற்கு ஆகும் செலவினை ஈடுகட்டுவதற்காக மட்டுமே விலை உயர்த்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பாடப்புத்தகத்தின் மேல் அட்டை காகிதம் மற்றும் அச்சுக்கூலி போன்றவற்றின் விலை உயர்ந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் ஏழை குடும்பத்தை சேர்ந்த மாணவர்களுக்கு விலையில்லா பாடநூல்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

போட்டித்தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில் நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்களுக்கு தேவையான அளவு பாடநூல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

முன்னதாக, பள்ளி மாணவர்கள் மற்றும் போட்டித்தேர்வர்கள் பயன்படுத்தும் பாடப்புத்தகங்களின் விலை உயர்வுக்கு கண்டனம் தெரிவித்த அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, விலை உயர்வை மாநில அரசு திரும்பப்பெற வேண்டும் என்று அறிக்கை ஒன்றில் வலியுறுத்தினார்.

ஒன்றாம் வகுப்பு பாடப்புத்தகம் 390 ரூபாயிலிருந்து, 550 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இந்த விலை உயர்வு, தனியார் பள்ளி மாணவர்கள் மட்டுமின்றி போட்டித்தேர்வுக்கு தயாராகும் இளையோருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், அடுத்த 24 மணிநேரத்தில் சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தேசபிரிவினை துயரங்களின் நினைவுதின புகைப்பட கண்காட்சி திருவண்ணாமலையில் நடைபெற்று வருகிறது.

---------------

நாமக்கல் மாவட்டம் சந்திரசேகரபுரத்தில், பெண் குழந்தைகளை காப்போம் - அவர்களுக்கு கல்வி கற்பிப்போம், குழந்தை திருமணத்தை தடுப்போம், மற்றும் டிஜிட்டல் இந்தியா இயக்கம் குறித்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

------------------

கிராமப்புற மக்களின் உடல்நலன் மற்றும் மனநலனை பாதுகாக்கும் வகையில் அரியலூரில் அமைக்கப்பட்டுள்ள மரகத பூஞ்சோலையை ஆட்சியர் திரு ரத்னசாமி இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

தூத்துக்குடி காவல்துறை கண்காணிப்பாளராக திரு ஆல்பர்ட் ஜான் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

-----------------

கோவையில் போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று காவல்துறை கண்காணிப்பாளராக இன்று பொறுப்பேற்றுக்கொண்ட திரு கார்த்திகேயன் கூறியுள்ளார்.

----------------

நெல்லை மாவட்டத்தில் கனமழை எச்சரிக்கையையடுத்து, மாஞ்சோலை பகுதிகளுக்கான சூழல் சுற்றுலா சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் முகாமில் பெறப்பட்ட 35 மனுக்கள் மீது, உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையர் திரு அருண் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

----------

சென்னை மாவட்டத்தில் உள்ள சிறு-குறு நடுத்தர தொழில்களுக்கான சிறப்பு கடனுதவி வழங்கும் விழா வரும் 19-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 6-ஆம் தேதிவரை நடைபெறும் என ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜெகடே தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக தென்னாப்பிரிக்காவின் **Morne Morkel** நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலர் திரு **Jay Shah** இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

-------------

18 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மகளிர் **Hand Ball** சாம்பியன் போட்டி சீனாவின் **Chuzhou–**வில் இன்று தொடங்கியது.

இந்தியா முதல் ஆட்டத்தில் பிரான்சிடம் தோல்வியடைந்தது.

நாளை நடைபெறவுள்ள போட்டியில் இந்தியா – பிரேசிலை எதிர்கொள்கிறது.

------------

கேரளா மற்றும் இமாச்சலப்பிரதேசத்தில் நேரிட்ட நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவியை திரட்டுவதற்கென இரண்டு போட்டிகள் நடத்தப்பட உள்ளதாக அகில இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதன்படி முதல் போட்டி கேரள மாநிலம் மலப்புரத்தில் உள்ள **Manjeri-**யில் வரும் 30-ஆம் தேதி நடைபெறுகிறது.

இப்போட்டியில் **Mohammedan Sporting Club** அணி - **Super Leaque Kerala** அணியை எதிர்கொள்கிறது.

இரண்டாவது போட்டி அடுத்த மாதம் 2-ஆம் தேதி லக்னோவில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்கவுள்ள அணியின் விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<END>>>>>**